செ.வெ.எண்: 319 நாள்:16.05.2018

**திருநெல்வேலி மாவட்டம் திருவேங்கடம் வட்டம் வெள்ளாகுளம் கிராமத்தில் நடைபெற்ற மனுநீதிநாள் முகாமில் 148 பயனாளிகளுக்கு ரூ.35.41 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப, அவர்கள் வழங்கினார்.**

-----

திருநெல்வேலி மாவட்டம் திருவேங்கடம் வட்டம் வெள்ளாகுளம் கிராமத்தில் மனுநீதிநாள் முகாம் இன்று (16.05.2018) நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு 148 பயனாளிகளுக்கு ரூ.35.41 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

கிராம பகுதிகளில் மனுநீதிநாள் முகாம் நடத்துவது அப்பகுதி மக்களுக்கு அரசின் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் கிராமப்புற மக்களின் கோரிக்கைகளை நேரில் கேட்டு நிறைவேற்றிடும் வகையிலும் நடத்தப்படுகிறது. மேலும் கிராமப்புற பகுதிகளின் அடிப்படை வசதிகளை நேரில் கண்டறிந்து நிறைவேற்றிடவும் இது போன்ற மனுநீதிநாள் முகாம் நடத்தப்படுகிறது. இப்பகுதி மக்களிடம் கடந்த மாதம் 35 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் 33 மனுக்கள் ஏற்கப்பட்டு இன்று நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இன்றைய விழாவில் வருவாய்த்துறையின் மூலம் 85 நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களும், 28 நபர்களுக்கு மாதந்திர உதவித்தொகை வழங்குவதற்கான உத்தரவும், குருவிகுளம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மூலம் 8 நபர்களுக்கு பிரதம மந்திர வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான உத்தரவும், 2 நபர்களுக்கு பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டத்தில் வங்கி கடன் வழங்குவதற்கான உத்தரவும், குடிமை பொருள் வழங்கல் துறையின் மூலம் பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின் கீழ் 5 நபர்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகளும், வேளாண்மைத்துறையின் மூலம் 10 நபர்களுக்கு மண்வள அட்டைகளும், 10 நபர்களுக்கு நுண் உரங்களும் என மொத்தம் 148 பயனாளிகளுக்கு ரூ.35 லட்சத்து 41 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

இப்பகுதி விவசாயிகள் அதிகம் உள்ள பகுதியாகும் விவசாயிகள் உழவன் செயலியை உங்களது மொபைலில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம் விவசாயிகளுக்கான அரசின் திட்டங்கள் குறித்தும், இப்பகுதியில் வழங்கப்படுகின்ற நலத்திட்ட உதவிகள் குறித்தும் தெரிந்து கொள்ளலாம். ஏழை எளிய மக்களின் கல்விக்காக அரசு பல நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. எனவே உங்களது குழந்தைகளை அவசியம் உயர் கல்வி வரை படிக்க வைக்க வேண்டும். இன்று தேசிய டெங்கு ஒழிப்பு தினமாகும். திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஒரு சில பகுதியில் டெங்கு பாதிப்பு காணப்பட்டது. இனிவரும் காலங்களில் அனைவரும் விழிப்புணர்வுடன் செயல்பட்டு டெங்கு பாதிப்பு இல்லாத மாவட்டமாக உருவாக்கிட வேண்டும். இங்கு வருகை தந்த பொதுமக்கள் அரசின் நலத்திட்ட

உதவிகளை நன்கு தெரிந்துகொண்டு மற்றவர்களுக்கும் எடுத்து சொல்லி அவர்களும் பயனடைய உதவிட வேண்டும். என பேசினார்.

முன்னதாக கால்நடை பராமரிப்புத்துறை, சுகாதாரத்துறை, சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், வேளாண்மைத்துறை, தோட்டாக்கலைத்துறை உள்ளிட்ட துறைகளின் மூலம் அமைக்கப்பட்ட செயல்விளக்க கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். மேலும் முகாம் நடைபெறும் வளாக பகுதியில் மரக்கன்று நடவு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.புண்ணியகோட்டி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் (பொ) திரு.பழனிகுமார், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.செந்தில் வேல்முருகன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.இந்திரா, கால்நடைபராமரிப்புத்துறை இணை இயக்குநர் திரு. ஜெயக்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.விஜயகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை திருமதி.சாந்திராணி, மாவட்ட ஆட்சியரின் தனி நேர்முக உதவியாளர் (நிலம்) திரு.ராமசுப்பிரமணியன், துணை ஆட்சியர் பயிற்சி செல்வி லட்சுமிபிரியா, தோட்டாக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.அமிர்தம், திருவேங்கடம் வட்டாட்சியர் திருமதி.லட்சுமி, சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் திரு.ஜேம்ஸ் வெள்ளத்துரை, மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.